

அருப்புக்கோட்டை கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் கிழக்கு தெரு பகுதியில் ரூ.17.19 லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கலையரங்கத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் நாகஜோதி ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கண்ணன், அழகு ராமானுஜம் ஆகியோர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல் நிலைப்பள்ளி, எஸ்.எஸ் கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, முறையூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பிரான்மலை அரசு மேல்நிலைப்பள்ளி, கிருங்காக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் கணேசன் பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து ,சோம சுந்தரம்,ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் பாலசுப்ரமணியன் நகர செயலாளர் கதிர்வேல் நகர அவை தலைவர் சிவக்குமார் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில்சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் அயலாக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் என் எம் சுரேஷ் ஒன்றிய துணை செயலாளர்கள் சிவபுரி சேகர்,முத்துக்குமார்,மாவட்ட பிரதிநிதிகள் செல்வகுமார் ஞானசேகரன் தனுஷ்கோடி,பிரதிநிதி குடோன்மணி உள்ளிட்டார் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் கலந்துகொண்டு மாநகர களுக்கு விலை இல்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

## சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 7 பள்ளிகளில்

# 741 மாணவர்களுக்கு ரூ.35 லட்சத்தில் இலவச மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரை!

சிங்கம்புணரி, நவ. 15 - சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஏழு பள்ளிகளில் 741 மாணாக்கர்களுக்கு 35 லட்சம் மதிப்பிலான தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் கலந்துகொண்டு வழங்கினார்.

தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கான ஆட்சியாக ஆட்சி செய்து பள்ளி மாணவர்களுக்கான தனிகவனம் செலுத்தி ஆட்சி செய்து வரும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் பல எண்ணற்ற திட்டங்கள் வகுக்கப்பட்டு சிறப்பாக நடை பெற்று வருகிறது அதன் தொடர்ச்சியாக கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 07 பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 741 மாணாக்கர்களுக்கு ரூ.35.70 இலட்சம் மதிப்பீட்டிலான விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளி, எஸ். எஸ் கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளி, முறையூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பிரான்மலை அரசு மேல்நிலைப்பள்ளி, கிரு ங்காக் கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,தலைமை வகித்தார். முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ராம அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் கணேசன் பொதுக் குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து ,சோமசுந்தரம்,ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் பால சுப்ரமணியன் நகர செயலாளர் கதிர்வேல் நகர அவை தலைவர் சிவக்குமார் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில்சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் அயலாக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் என் எம் சுரேஷ் ஒன்றிய துணை செயலாளர்கள் சிவபுரி சேகர்,முத்துக்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் செல்வகுமார் ஞானசேகரன் தனுஷ்கோடி,பிரதிநிதி குடோன்மணி உள்ளிட்டார் முன்னிலையில் சிறப்பு அழைப் பாளராக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் கலந்து கொண்டு மாநகர களுக்கு விலை இல்லா மிதிவண்டி களை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் மாணவர்கள் மத்தியில் பேசும் பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, தொழில், கல்வி, வேளாண்மை மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரி யான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்று கடந்த மூன்றரை ஆண்டுகளில் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 90 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவது மட்டுமன்றி, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் புதிதாகவும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல் படுத்தி வருகிறார்கள்.ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வியை பொறுத்தே அமைகிறது. எனவே அதனை கருத்தில் கொண்டும், குறிப்பாக எதிர்கால இந்தியாவை வழிநடத்தக் கூடிய சக்தியாக விளங்கி வரும் மாணாக்கர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டும், பள்ளிக்கல்வித் துறைக்கென 40 ஆயிரம் கோடி நிதியும், உயிர்கல்வித்துறைக்கென 07 ஆயிரம் கோடி என மொத்தம் 47 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி, வரலாற்றுச் சுவடுகளில் சிவகங்கை மாவட்டம் இடம் பெறுகின்ற வகையில், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 10-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு தேர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றும், அதேபோன்று, 2023-2024 ஆம் கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு தேர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் இரண்டாம் இடத்தை பெற்றும், சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இனி வரும் காலங்களில் முதல் இடத்தை நோக்கி சிவகங்கை மாவட்ட பள்ளிக்கல்வித் துறை பயணிக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ மாணவியர்களுக்கு பயனுள்ள வகையில் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2024-2025 கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் கடந்த ஜூலை மாதம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிடும் பொருட்டு, மாவட்டத்திலுள்ள 68 அரசு பள்ளிகள் உள்ளிட்ட 105 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்று வரும் 4,817 மாணவர்கள் மற்றும் 6,564 மாணவியர்கள் என மொத்தம் 11,381 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில், கடந்த 29.07.2024 அன்று நமது மாவட்டத்தில் விலையில்லா மிதிவண்டிகள் மாணாக்கர்களுக்கு வழங்கி தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்றைய தினம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 59 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 2,89,100/- மதிப்பீட்டிலும், 42 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,99,920/-மதிப்பீட்டிலும், எஸ்.எஸ் கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் 27 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,32,300/- மதிப்பீட்டிலும், 32 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,52,320/-மதிப்பீட்டிலும், முறையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 22 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,07,800/- மதிப்பீட்டிலும், 22 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,04,720 /- மதிப்பீட்டிலும், பிரான்மலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 45 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 2,20,500/- மதிப்பீட்டிலும், 44 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 2,09,440/- மதிப்பீட்டிலும், கிருங்காக் கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் 39 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,91,100/- மதிப்பீட்டிலும், 23 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,09,480/- மதிப்பீட்டிலும், சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 119 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 5,83,100/- மதிப்பீட்டிலும் மற்றும் சிங்கம்புணரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 267 மாணவியர்களுக்கு ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 12,70,920/- மதிப்பீட்டிலும் என 07 பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 741 மாணாக்கர்களுக்கு ரூபாய் 35,70,700/- மதிப்பீட்டிலான விலையில்லா மிதி வண்டிகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மிதிவண்டிகளை பெறும் மாணாக்கர்கள் பாதுகாப்பான முறையில் சாலை விதிகளை பின்பற்றி, தங்களது பயணங்களை முறையாக மேற்கொள்ள வேண்டும். தங்களின் பெற்றோர்களின் நிலையிலிருந்து, உங்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்டங்களையும் பெற்று பயனடைந்து வரும் மாணவ, மாணவியர்கள், கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு மற்றும் தனித்திறன்களில் சிறந்து விளங்கி, தங்களது பெற்றோர்களுக்கும், தாங்கள் பயின்ற பள்ளிக்கும், தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேற்கண்ட பள்ளிகளில் 2023-2024ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்க தொகையாக முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.10,000/-மும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.5,000/- மும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/-மும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். மேலும், மேற்கண்ட பள்ளிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென தலா ரூ.10,000/- வீதம் பள்ளிகளின் புரவலர் நிதியினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், தவத்திரு குருமகா சந்நிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் , கிருங்காக் கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் அகிலா கண்ணன், ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன் நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், ஒன்றிய இளைஞர் அணி மனோகரன், நகர இளைஞரணி அருண் பிரசாத், பிரான்மலை மல்லிகா மெடிக்கல் செந்தில் குமார், சிங்கம்புணரி பிரேம்குமார், வரிஞ்சி சரவணன்,பொன் சரவணன், அழகுராஜா, மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பேருந்து சாலைகள் துறை** பே. சா. து. ந. க. எண் : பி4 / 4396 / 2024

**குறுகிய கால மின்னணு இரண்டு உறை ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து சாலைகள் துறை மண்டலம் 13 ஆகிய 5 இடங்களில் பஸ் பே மற்றும் பஸ் டெர்மினஸ் புதுப்பிக்கும் பணி.

பணியின் உத்தேச தொகை அதிகபட்சம் ரூ. 408 லட்சம்

முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 05.12.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 06.12.2024 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4928 / ஒப்பந்தப்புள்ளி / 2024

கண்காணிப்பு பொறியாளர்/ பே.சா.து


# காட்பாடி ‘முரசொலி’ முகவர் கே.எஸ்.கண்ணன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



காட்பாடி, நவ.15 - வேலூர் மாவட்டம், காட்பாடி தெற்கு பகுதி துணைச் செயலாளரும் காட்பாடி முரசொலி முகவருமான கே.எஸ்.கண்ணன் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2024) இரவு 8மணிக்கு இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத்தினரும், உறவினர்களும் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் உடல் நல்லடக்கம் நேற்று (14. 11.2024) மாலை 4 மணியளவில் விருதாம்பட்டு பாலாற்றங்கரையில் நடைபெற்றது.

## வேலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள

# 5 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்கள்!

## வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள் !



வேலூர், நவ.15 - வேலூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரைவு வாக்காளர் பட்டியலில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணையம் வாய்ப்பு வழங்கி உள்ளதின் அடிப்படையில் என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2025ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம், 2025இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஏதுவாக வேலூர் மாவட்டத்தில் 29.10.2024 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் தகுதி வாய்ந்த வாக்காளர்கள் பட்டியலில் தங்களின் பெயர்களை சேர்த்திட சிறப்பு முகாம் நடத்தவும் ஆணையிட்டுள்ளது.

சிறப்பு முகாம் நடைபெறும் நாள் மற்றும் கிழமை 16.11.2024 சனிக்கிழமை, 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை, 23.11.2024 சனிக்கிழமை, 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை எனவே மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர் கிளை கழக நிர்வாகிகள் குறிப்பாக BLA2 மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆகியோர்கள் மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி நடைபெற உள்ள சிறப்பு முகாமை பயன்படுத்தி அதிகப்படியான தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் இறுதி பட்டியலில் இடம்பெற செய்ய தொய்வின்றி பணியாற்றிட வேண்டும் என கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்குகீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க , கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி [ 16.11.2024, 17.11.2024], சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் [ 23.11.2024, 24.11.2024] , சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடக்க உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம்களில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் [ BLA2] மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் அவரவர் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் 01.01.2025 அன்று 18 வயது நிறைவடைபவர்களை புதிய வாக்காளர்களாக பதிவு செய்தல், அந்தந்த பூத்களில் தகுதியற்ற வாக்காளர்களை நீக்குதல், தகுதியான வாக்காளர்களை சேர்த்தல் போன்ற வாக்காளர் திருத்தப் பட்டியல் பணியிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மதுரை ஒலிம்பிக் அகாடமி கட்டிடப் பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார், அதனைத் தொடர்ந்து மதுரை விளையாட்டு வளாகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ. சங்கீதா மாநகராட்சி மேயர் த இந்திராணி பொன் வசந்த் , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் சோமசுந்தர பாண்டியன் மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.